# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

## 1981 ஆம் ஆண்டின் 76 ஆம் இலக்க,

## தேசியப் பெருந்தோட்ட முகாமை நிறுவக

## (திருத்தச்) சட்டம்

---

*[1981, திசெம்பர் மாதம் 29 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1982, சனவரி மாதம் 01 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 20* *தபாற் செலவு : சதம் 50*

## 1981 ஆம் ஆண்டின் 76 ஆம் இலக்க, தேசியப் பெருந்தோட்ட முகாமை நிறுவக (திருத்தச்) சட்டம்

[1981 திசெம்பர் மாதம் 29 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஒ. 88/80
1406

**1979 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, தேசியப் பெருந்தோட்ட முகாமை நிறுவகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 1981 ஆம் ஆண்டின் 76 ஆம் இலக்க, தேசியப் பெருந்தோட்ட முகாமை நிறுவக (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1979 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க சட்டத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 45 ஆம் இலக்க, தேசியப் பெருந்தோட்ட முகாமை நிறுவகச் சட்டத்தின் (இது இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 6 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ஆ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள் :—

(i) இலங்கைத் தேயிலைச் சபையின் தவிசாளர் ;

(ii) இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளர் ;

(iii) தெங்கு ஆராய்ச்சிச் சபையின் பணிப்பாளர் ;

(iv) தேயிலைச் சிறுபற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபைத் தவிசாளர் ;

(v) தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளர் ;

(vi) நிறுவகத்தின் பணிப்பாளர் ; அத்துடன்

(vii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால், பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரும் பல்கலைக்கழகங்களுள் ஏதேனும் ஒன்றைச் சேர்ந்தவருமான பிரதிநிதி ஒருவர் ;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

"நிறுவகத்தின் உறுப்பினர்களது ஊதியமும் செலவுகளை மீளளித்தலும்.

12. நிறுவகத்தின் உறுப்பினர்கள் கூட்டங்களுக்குச் சமுகமளிக்கின்றமைக்காக, அமைச்சரின் அங்கீகாரத்துடன் நிறுவகத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் கொடுக்கப்படுதல் வேண்டும். உறுப்பினர்கள் நிறுவகத்தின் கூட்டங்களுக்கு வருகைதரும் நோக்கத்திற்காக அல்லது நிறுவகத்தால் அங்கீகரிக்கப்படக்கூடியவையான, நிறுவகத்தின் நடவடிக்கைகளோடு சம்பந்தப்பட்ட அத்தகைய வேறு நோக்கங்களுக்காக அவர்கள் உறக்கூடிய அத்தகைய பிரயாணச் செலவுகள், விடுதிச் செலவுகள் மற்றும் இடைநேர்விலோன செல்வுகள் என்பன நிறுவகத்தால் மீளளிக்கப்படுதல் வேண்டும்.".

ஏ—58769—6,625(09/81)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்தச் சந்தா (உள்நாடு) ரூபா 150; (வெளிநாடு) ரூபா 200; ஒவ்வோராண்டும் திசெம்பர் மதம் 15 ந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்தாய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.